உ

# யா/புற்றளை மகா வித்தியாலயம்

## க.பொ.த.உயர்தரம் - இந்துநாகரிகம் - செயலட்டை – 05

## அலகு – சைவ சித்தாந்தக் கோட்பாடுகள்

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக

01. சைவசித்தாந்தம் என்பதன் பொருள் யாது?
02. "சிவமாதல் வேதாந்த சித்தாந்த மாகும்" எனக் குறிப்பிடபிட்டவர் யார்?
03. சித்தாந்தக் கோட்பாட்டைச் சுருக்கியும் விரித்தும் தமிழ் மொழியிலே முழுமையாக முதலிலே தந்தவர் யார்?
04. சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள்களும் எவை?
05. சைவசித்தாந்தக் கோட்பாடுகள் எவற்றினூடாக விளக்கப்படுகின்றது?
06. சைவசித்தாந்தக் கோட்பாடுகளுக்கு அடிப்படையாக விளங்கும் பிரமாணங்கள் எவை?
07. சைவசித்தாந்தக் கோட்பாட்டின் உயிர் நிலையாக விளங்குவது எது?
08. சற்காரிய வாதம் என்றால் என்ன?
09. அறிவிக்காமலே அறியும் பொருள் எது?
10. அறிவித்தால் அறிந்து அறிவிக்காவிட்டால் அறியமாட்டாத பொருள் எது?
11. அறிவித்தாலும் அறிய மாட்டாத பொருள் எது?
12. சைவசித்தாந்திகள் இறைவனை எப்பெயர்களால் குறிப்பிடுகின்றனர்?
13. சைவசித்தாந்தம் பதிக்கு வழங்கிய இரு நிலைகளும் எவை?
14. இறைவனின் சொரூப இலட்சணம் பற்றிக் கூறும் நூல் எது?
15. இறைவனின் தடத்த நிலை பற்றிக் கூறும் நூல் எது?
16. இறைவனின் எண்குணங்களும் எவை?



Prepared by : Mrs. S. Suresh

VadaZICTEC

17. இறைவனின் மூவகைத் திருமேனிகளும் எவை?

18. சிவனின் ஒன்பது பேதங்களும் எவை?

19. இறைவனின் ஐந்தொழில்களும் எவை?

20. சதசத்து எனப்படுவது எது?

21. சித்தாந்திகள் உயிர்களை எப்பெயர்களால் அழைத்தனர்?

22. பசு என அழைக்கப்பட்டதற்கான காரணம் யாது?

23. சார்ந்ததன் வண்ணமாக அமைந்தது எது?

24. பசு ஏன் சதசத்து என அழைக்கப்பட்டது?

25. சைவசித்தாந்தம் கூறும் ஆன்மாவின் காரணாவத்தைகள் எவை?

26. சைவசித்தாந்தம் கூறும் மூவகை ஆன்மாக்களும் எவை?

27. சைவசித்தாந்தம் கூறும் ஆன்மாவின் காரியாவத்தைகள் எவை?

28. பாசம் என அழைக்கப்படுவதற்கான காரணம் யாது?

29. சித்தாந்திகள் பாசத்தினை வேறு எப்பெயர்களால் அழைப்பர்?

30. சித்தாந்தம் கூறும் மும்மலங்களும் எவை?

31. ஆணவம் ஏன் மூலமலம் என அழைக்கப்படுகிறது?

32. ஆணவம் என ஏன் அழைக்கப்பட்டது?

33. ஆகந்துக மலங்கள் எவை?

34. ஆணவத்தைக் குறிக்கும் வேறு பெயர்கள் எவை?

35. ஆணவம் ஏன் இருளை விடக் கொடியது எனப்படுகிறது?

36. ஆணவத்தின் குணங்கள் எவை?

37. ஆணவத்தின் தன்மைகளை அருணந்திசிவாச்சாரியார் எவ்வாறு விளக்கியுள்ளார்?



Prepared by : Mrs. S. Suresh

VadaICTEC

38. கன்மம் என்பதன் பொருள் யாது?

39. கன்மத்தின் செயல்கள் எவை?

40. மூவகை கன்மங்களும் எவை?

41. எல்லாக் காரியங்கள் தன்னிடத்தில் ஒடுங்குவதற்கும் தோன்றுவதற்கும் காரணமாய் நிற்பது எது?

42. மாயையின் வகைகள் எவை?

43. மாயையிலிருந்து தோன்றிய தத்துவங்கள் எத்தனை? அவை எவை?

44. மாயா காரியங்கள் எவை?

45. ஆன்மா மலபந்தங்களில் இருந்து விடுபடுவதற்கு சைவசித்தாந்தம் கூறும் நால்வகை மார்க்கங்களும் எவை?

46. ஆன்மா மலங்களில் இருந்து விடுபட்டு பக்குவ நிலையை அடைய சித்தாந்தம் கூறும் படிநிலைகள் எவை?

47. இருவினை ஒப்பு என்றால் என்ன?

48. மலபரிபாகம் என்றால் என்ன?

49. சத்திநிபாதம் என்றால் என்ன?

50. சைவசித்தாந்தம் குறிப்பிடும் முத்தி நிலை யாது?

VadaICTEC



Prepared by : Mrs. S. Suresh